**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC. 119/2022**

**Prosecution Witnesses : 5**

| | | | |
|---|---|---|---|
| Name | : செல்வராஜ் | Caste | : |
| Father 's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(Accused )

**05.06.2024**

**முதல் விசாரணை**

நான் இறுதியாக பெருங்குடி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணி செய்து பணி ஓய்வு பெற்று அவனியாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 22.04.2015 அன்று 12.30 மணிக்கு கல்யாணி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்த மூலமாக புகாரை பெற்று புகாரின் தன்மைக்கேற்ப பெருங்குடி காவல் நிலைய குற்ற எண். 128/2015, ச/பி. 392 இதச வாக வழக்கு பதிவு செய்தேன். அந்த அச்சு முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆகும். அதை புகாருடன் முதல் தகவல் அறிக்கையையும் இணைத்து கனம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அதன் பின்பு மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். வழக்கு விசாரணைக்காக திருமங்கலம் நகர் வட்ட காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் கு.வி.**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் சுமார் 1 கி.மீ தூரம் என்றால் சரிதான். சம்பவம் நடந்த மறுநாள் மதியம் புகார் பெறப்பட்டது என்றால் சரிதான். இதில் நான் எந்தவிதமான புலன் விசாரணையும் துவக்கவில்லை என்றால் சரிதான்.